**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**MCOP No: 87/2022**

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | ராமசாமி |
| த.க.பெயர் | சின்னசாமி கவுண்டர் |
| கிராமம் | மூனாம்பள்ளி |
| மாவட்டம் | |
| வயது | 52 |

ம.சா. 2 நாள் 10.07.2026

**முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் இம்மனுவின் மனுதாரர் தரப்பு சாட்சி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

**குறுக்கு விசாரணை (3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். புகாரில் நான் என்ன வாகனம் ஓட்டி சென்றேன் என சொல்லவில்லை. இறந்த சென்னியப்பனுக்கு 57 வயதிருக்கும். அவர் எனக்கு சித்தப்பா உறவு முறை. விபத்து தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்டது. இறந்த சென்னியப்பன் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தார். கார் அதே திசையில் அவருக்கு பின்னால் வந்தது. கார் என்னை கடந்து தான் சென்றது. விபத்திற்கு சென்னியப்பனின் தவறு தான் காரணம் என்றும் அவர் தான் பின்னால் வரும் வாகனத்தினை கவனிக்காமல் விபத்து ஏற்பட்டது என்றும் இறந்த சென்னியப்பன் எனக்கு உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.07.10 16:07:32 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS